## ஆகஸ்ட் - 17- வியாழன்

### பூவுலகே! தலைவர் முன்னிலையில் நடுநடுங்கு! திபா. 114:7

### முதல் வாசகம்: யோசுவா 3:7 – 11,13 - 17

ஆண்டவர் யோசுவாவிடம், ”இன்று இஸ்ரயேலர் அனைவரின் பார்வையில் உன்னை உயர்த்தத் தொடங்குகிறேன். அதனால் நான் மோசேயுடன் இருந்ததுபோல் உன்னோடும் இருப்பேன் என்று அவர்கள் அறிந்து கொள்வார்கள்.உடன்படிக்கைப் பேழையைத் தூக்கிவரும் குருக்கள் யோர்தான் ஆற்றங்கரைக்கு வந்தவுடன் அங்கேயே நிற்குமாறு அவர்களுக்குக் கட்டளையிடு” என்றார். யோசுவா இஸ்ரயேல் மக்களிடம், ”இங்கே வாருங்கள், உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் வார்த்தைகளைக் கேளுங்கள்.வாழும் இறைவன் உங்களிடையே இருக்கின்றார் என்று இதனால் அறிவீர்கள். அவர் உங்கள் முன்னிருந்து கானானியர், இத்தியர், இவ்வியர், பெரிசியர், கிர்காசியர், எமோரியர், எபூசியர் ஆகியோரை விரட்டிவிடுவார். இதோ, உலகனைத்தின் ஆண்டவரது உடன்படிக்கைப் பேழை உங்கள்முன் யோர்தானைக் கடக்கின்றது. உலகனைத்தின் ஆண்டவரது உடன்படிக்கைப் பேழையைத் தூக்கிச் செல்லும் குருக்களின் காலடிகள் யோர்தான் நீரில் பட்டவுடன் அத்தண்ணீர் பிரிந்து போகும். மேற்பகுதியிலிருந்து ஓடிவரும் தண்ணீர் குவியலாக நிற்கும்” என்றார்.மக்கள் தங்கள் கூடாரங்களிலிருந்து யோர்தானைக் கடக்கப் புறப்படும்போது குருக்கள் உடன்படிக்கைப் பேழையைத் தூக்கிக் கொண்டு மக்கள் முன்னே சென்றனர்.உடன்படிக்கைப் பேழையைத் தூக்கிச் சென்ற குருக்கள் யோர்தானை அடைந்தனர். அவர்கள் காலடிகள் யோர்தான் நீரின் விளிம்பில் நனைந்தவுடன், மேற்பகுதியிலிருந்து ஓடிவந்த யோர்தான் நீர் வெகுதொலையில் நின்றது. அறுவடை நாள்களில் இந்நதி கரைபுரண்டு ஓடும்.மேற்பகுதியிலிருந்து வந்த நீர், சாரத்தானின் அருகில் இருந்து ஆதாம் நகருக்கு எதிரில் வெகு தொலையில் மேலெழும்பி நின்றது. கீழே ஓடிய நீர் பாலைநிலக் கடலாகிய சாக்கடல் வரை ஓடிமறைந்தது. மக்களும் எரிகோவுக்கு நேர்எதிராகக் கடந்து சென்றனர்.இஸ்ரயேலர் அனைவரும் கடந்து முடிக்கும்வரை, ஆண்டவரது உடன்படிக்கைப் பேழையைத் தூக்கிச் சென்ற குருக்கள் யோர்தான் நடுவே வறண்ட தரையில் நின்றனர். எல்லா இஸ்ரயேல் மக்களும் அவ்வறண்ட தரை வழியாக நடந்தனர்.

### பதில்பாடல் : அல்லேலூயா

### நற்செய்தி : மத்தேயு18 : 21 –- 19 : 1

அக்காலத்தில் பேதுரு இயேசுவை அணுகி, ”ஆண்டவரே, என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்துவந்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும்? ஏழு முறை மட்டுமா? எனக் கேட்டார்.அதற்கு இயேசு அவரிடம் கூறியது ”ஏழுமுறை மட்டுமல்ல எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கிறேன்.விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம் ஓர் அரசர் தம் பணியாளர்களிடம் கணக்குக் கேட்க விரும்பினார். அவர் கணக்குப் பார்க்கத் தொடங்கியபொழுது, அவரிடம் பத்தாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவனைக் கொண்டு வந்தனர்.அவன் பணத்தைத் திருப்பிக் கொடுக்க இயலாத நிலையில் இருந்தான். தலைவரோ, அவனையும் அவன் மனைவி மக்களோடு அவனுக்குரிய உடைமைகள் யாவற்றையும் விற்றுப் பணத்தைத் திருப்பி அடைக்க ஆணையிட்டார்.உடனே அப்பணியாள் அவர் காலில் விழுந்து பணிந்து, ”என்னைப் பொறுத்தருள்க் எல்லாவற்றையும் உமக்குத் திருப்பித் தந்து விடுகிறேன்” என்றான்.அப்பணியாளின் தலைவர் பரிவு கொண்டு அவனை விடுவித்து அவனது கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தார்.ஆனால் அப்பணியாள் வெளியே சென்றதும், தன்னிடம் நூறு தெனாரியம் கடன்பட்டிருந்த உடன் பணியாளர் ஒருவரைக் கண்டு, ”நீ பட்ட கடனைத் திருப்பித் தா” எனக்கூறி அவரைப் பிடித்துக் கழுத்தை நெரித்தான்.உடனே அவனுடைய உடன் பணியாளர் காலில் விழுந்து, என்னைப் பொறுத்தருள்க் நான் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்” என்று அவனைக் கெஞ்சிக் கேட்டார்.ஆனால் அவன் அதற்கு இசையாது, கடனைத் திருப்பி அடைக்கும்வரை அவரைச் சிறையிலடைத்தான். அவருடைய உடன் பணியாளர்கள் நடந்ததைக் கண்டபோது மிகவும் வருந்தித் தலைவரிடம் போய் நடந்தவற்றையெல்லாம் விளக்கிக் கூறினார்கள்.அப்போது தலைவர் அவனை வரவழைத்து, ”பொல்லாதவனே, நீ என்னை வேண்டிக் கொண்டதால் அந்தக் கடன் முழுவதையும் உனக்குத் தள்ளுபடி செய்தேன்.நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல நீயும் உன் உடன் பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் அல்லவா? என்று கேட்டார்.அத்தலைவர் சினங் கொண்டவராய், அனைத்துக் கடனையும் அவன் அடைக்கும்வரை அவனை வதைப்போரிடம் ஒப்படைத்தார்.உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதரர் சகோதரிகளை மனமார மன்னிக்கா விட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார்.யேசு இவ்வாறு உரையாற்றி முடித்த பின்பு கலிலேயாவை விட்டு அகன்று யோர்தானுக்கு அப்பாலுள்ள யூதேயப் பகுதிகளுக்குச் சென்றார்.

**தியானம்:** ஆண்டவர் இயேசு மன்னிப்பதில் வள்ளலாக இருக்கிறார். என்று (எசா 55: 7) வாசிக்கின்றோம். அவர் விரும்புவது அவரிடத்தில் நாம் நெருங்கி செல்ல வேண்டும். அப்பொழுது அவர் மன்னிப்பு மகா பெரியதாக இருக்கும் . எங்கெல்லாம் மன்னித்தாரோ அந்த இடத்தில் அற்புதம் அதிசயத்தை வெளிப்படுத்துகின்றார். இயேசு சென்ற இடமெல்லாம் மனதுருகின்றவராய் , குணப்படுத்துகின்றவராய் ,தம் வார்த்தைகளைக் கொடுத்து மனம் திருப்புகின்றவராய் இருக்கின்றார் . இன்றைய உவமையில் பெரிய கடன் பட்டவரை மன்னிப்பதைப் பார்த்தீர்களா ? (எசா 1:18) நம்முடைய பாவங்கள் இரத்த நிறமாக இருந்தாலும், அவற்றை வெண்மையமான பஞ்சைப்போலவும் ,பனியைப் போலவும் மாற்றுகின்ற ஆண்டவர் ஒருநாளும் அவர் நம்மை தண்டிக்க விரும்புவதில்லை. இயேசுக்கிறிஸ்த்து இந்த உலகத்திற்கு வந்த நோக்கமே நம்மை மன்னிக்க, நாம் மீட்புபெறவேண்டும் என்பதற்காகவே. இந்த உலத்திலே மிக கடினமான காரியம் எது? மன்னிப்பது தான் நம்மை காயப்படுத்தியவர்களை நம்மை வேதனைப் படுத்தியவர்களை, அவமானப்படுத்தியவர்களை, நம்முடைய கதறல்களுக்கும் கண்ணீருக்கும் காரணமானவர்களை மன்னித்தால் பெரிய ஆசீர்வாதங்களைப் பெறுவோம் . அது அவ்வளவு சாத்தியமில்லை. ஆனால் உண்மையிலே கடினம் தான். மன்னித்தால் அவன் சுதந்திரமானவனாக மாறிவிடுகின்றான். ஆனால் மன்னிக்காத போது அவன் உள்ளத்தில் காயங்களையும், பல விதமான வருத்தம், வேதனைகளைக் கூட தனக்குள்ளாக சுமந்து வைத்திருக்கின்றான். இயேசு சிலுவையில் சொன்ன முதல் வார்த்தை மன்னிப்பு தான். மன்னித்து பாருங்கள் உங்கள் வாழ்க்கையிலே நிறைய ஆசீவாதங்களையும், நிறைய ஆற்றல்களையும் நீங்கள் பெறுவதை காணலாம்.